**சுருக்கம்**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் — விடுதிகள் - ஆதிதிராவிடர் நல விடுதிகளில் தங்கி கல்விப் பயிலும் மாணாக்கர்களுக்கான மாதந்திர பல்வகை செலவினங்கள்- பள்ளி விடுதி மாணாக்கர்களுக்கு ரூ.100/- ஆகவும், கல்லூரி விடுதி மாணாக்கர்களுக்கு ரூ.150/- ஆகவும் உயர்த்தி வழங்க நிருவாக அனுமதி அளித்தல்- ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

**ஆதிதிராவிடர் (ம) பழங்குடியினர் நலத் (ஆதிந4) துறை**

அரசாணை (நிலை) எண். 84 — நாள்.09.11.2021

திருவள்ளுவர் ஆண்டு 2052.
பிலவ வருடம், ஐப்பசி திங்கள் 23-ஆம் நாள்.
படிக்கப்பட்டது.

1. அரசாணை (நிலை) எண்.112, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந.4)துறை, நாள் 11.11.2011
2. ஆதிதிராவிடர் நல ஆணையரின் கடித ந.க.எண். த1/15750/2021, நாள் 11.06.2021 மற்றும் 02.07.2021.

-------------

**ஆணை:-**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ / மாணவியர்களுக்கு முடி வெட்டிக் கொள்வதற்கும் எண்ணெய், சோப்பு, சிகைக்காய் மற்றும் சலவைத்தூள் வாங்குவது போன்ற பல்வகைச் செலவினங்களை மேற்கொள்ள, பள்ளி விடுதி மாணாக்கருக்கு மாதம் ஒன்றுக்கு தலா ரூ.50/- உம், கல்லூரி விடுதி மாணவ/மாணவியர்களுக்கு, தலா ரூ.75/- உம், உயர்த்தி இறுதியாக ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. இந்நிலையில், தமிழ்நாடு அரசின், 2021-2022--ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு செலவு அறிக்கையில், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர்

நலத்துறை சார்பான ஏனைய பிற அறிவிப்புகளுடன் பின்வரும் அறிவிப்பும் வெளியிடப்பட்டிருந்தது :-

"**விடுதிகளில் பயிலும் மாணவர்களின் மாதாந்திர சில்லறைச் செலவினக் கட்டண உதவித்தொகை இரண்டு மடங்காக உயர்த்தப்படும்.**

3. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட ஆதிதிராவிடர் நல ஆணையரின் கடிதத்தில், ஆதிதிராவிடர் நலத்துறையின் கீழ் 183 கல்லூரி விடுதிகளும் (கல்லூரி விடுதி 145, ஐடிஐ விடுதி 17, பாலிடெனிக் விடுதி 5, முதுகலை கல்லூரி விடுதி 15, சட்டக் கல்லூரி விடுதி 1), 1143 பள்ளி விடுதிகளும் செயல்பட்டு வருகின்றன எனவும், இவ்விடுதிகளில் தங்கி கல்விப் பயிலும் மாணவர்களின் பொருட்டு, எண்ணெய், சோப்பு, சிகைக்காய், சலவைத்தூள் மற்றும் முடிவெட்டிக் கொள்ளுதல் போன்ற பல்வகைச் செலவினங்களுக்காக அனுமதிக்கப்பட்டுள்ள தொகையானது தற்போதுள்ள பொருளாதார நிலைக்கு உகந்ததாக இல்லை என்றும், எனவே, கல்லூரி மற்றும் பள்ளி விடுதி மாணாக்கருக்கான, பல்வகை செலவினத்தினை மாதம் ஒன்றிற்கு முறையே ரூ.75/- லிருந்து ரூ.150/- ஆகவும், ரூ.50/- லிருந்து ரூ.100/- ஆகவும் உயர்த்தி வழங்கிடவும், இதன்பொருட்டு ரூ.5,32,87,750/- ஐ (ரூபாய் ஐந்து கோடியே முப்பத்திரண்டு இலட்சத்து எண்பத்தி ஏழாயிரத்து எழுநூற்று ஐம்பது மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து உரிய ஆணை வெளியிடுமாறு அரசைக் கோரியுள்ளார்.

4. ஆதிதிராவிடர் நல ஆணையரின் மேற்காணும் கருத்துரு அரசால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது. அதனடிப்படையில், ஆதிதிராவிடர் நல பள்ளி விடுதிகளில் தங்கி கல்விப் பயிலும் மாணாக்கருக்கான பல்வகை செலவினங்களுக்கான தொகையை மாதம் ஒன்றுக்கு ரூ.50 லிருந்து ரூ.100/- ஆகவும், கல்லூரி விடுதிகளில் தங்கி கல்விப் பயிலும் மாணாக்கருக்கான மாதாந்திர தொகையை ரூ.75 லிருந்து ரூ.150/- ஆகவும் உயர்த்தி வழங்க நிருவாக அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது.

5. மேலும் பல்வகை செலவினங்களுக்கு விடுவிக்கப்படும் தொகை, மாணாக்கருக்கு நேரடியாக சென்று சேருவதை உறுதி செய்யுமாறு ஆதிதிராவிடர் நல ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலே பத்தி -4 இல் ஆணையிடப் பட்டதன் அடிப்படையில், தேவைப்படும் கூடுதல் நிதி

ஒதுக்கீட்டுக்கான செலவின விவரக் குறிப்புகளுடன், உரிய கருத்துருவினை அரசுக்கு அனுப்புமாறு ஆதிதிராவிடர் நல ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சாரா எண்.41377 நிதித்(ஆதி(ம)பந)துறை/2021, நாள். 09.10.2021-இல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க. மணிவாசன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

<u>பெறுநர்:-</u>

ஆணையர், ஆதிதிராவிடர் நலம், சென்னை-600 005
இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை-600 005.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்
அனைத்து மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள்.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை-600 008
மாநில முதன்மை கணக்காயர் (G & SSA), சென்னை-600 018.
மாநில கணக்காயர், சென்னை-600 009/18/35.
உள்ளுறை தணிக்கை அலுவலர், சென்னை-600 009.

<u>நகல்:-</u>

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை – 600 009.
அமைச்சர் (ஆதிந) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-600 009.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை,
முதன்மைச் செயலாளரின் தனிச்செயலர், சென்னை-600 009.
நிதித்(ஆதி(ம)பந) வ.செ.பொ-I/வ.செ.பொ-II/வ.வ.I) துறை, சென்னை – 600 009.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந5)துறை,சென்னை 600 0 09.
சிறப்பு திட்டச் செயலாக்கத் துறை, சென்னை-600 009.
இருப்புக் கோப்பு/உபரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது.

09/11/2021

பிரிவு அலுவலர்